# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அரசாங்க சேவையிலிருந்து தற்காலிகமாக இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை ஆட்சேர்த்தல்

CIABOC

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 2023 இல 9 ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள முழுமையான சுயாதீன நிறுவனமொன்றாகும். ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(5) மற்றும் 26(6) பிரிவுகளின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு தற்காலிகமாக (இரண்டாம் நிலை அடிப்படையில்) உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர். அதற்கமைய ஆட்சேர்க்கப்படும் பதவிகள் பின்வருமாறு.

| | பதவி | ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பணிப்பாளர் (முறைப்பாடுகள் முகாமை) | 01 |
| 2. | பணிப்பாளர் (ஊழல் தடுப்பு) | 01 |
| 3. | பணிப்பாளர் (சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம்) | 01 |
| 4. | பணிப்பாளர் (சர்வதேச தொடர்புகள் மற்றும் ஆராய்ச்சி) | 01 |
| 5. | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 |
| 6. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (முறைப்பாடுகள் முகாமை) | 02 |
| 7. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (ஊடகம்) | 01 |
| 8. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (கொள்முதல்) | 01 |
| 9. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (வழங்கல் மற்றும் பராமரிப்பு) | 01 |
| 10. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (நிதி) | 01 |
| 11. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் பயிற்சி) | 01 |
| 12. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம்) | 01 |
| 13. | பிரதி / உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 |
| 14. | நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| 15. | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| 16. | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 06 |
| 17. | மொழி பெயர்ப்பாளர் / உரைப் பெயர்ப்பாளர் | 02 |
| 18. | நூலகர் | 01 |
| 19. | ஊழல் எதிர்ப்பு முகாமைத்துவ உத்தியோகத்தர் | 27 |
| 20. | தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் | 11 |
| 21. | தொடர்பாடல் உதவியாளர் | 04 |
| 22. | சாரதி | 20 |
| 23. | அலுவலக உதவியாளர் | 26 |

தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு அந்த உத்தியோகத்தர்களின் நிரந்தர சேவைக்கு / பதவிக்கு ஏற்புடைய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அவ்வாறே வழங்கப்படும் என்பதோடு அடிப்படைச் சம்பளத்தின் 25% இரண்டாம் நிலைக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவைக்குரிய எந்தவொரு உரிமையும் இல்லாமல் ஆக்கப்படமாட்டாது என்பதுடன் ஏற்புடைய காலப்பகுதி உத்தியோகத்தரின் அல்லது ஊழியரின் பதவி உயர்வு மற்றும் ஓய்வுபெறுகை உள்ளிட்ட எந்தவொரு நோக்கத்திற்கும் செயலூக்கமுள்ள காலப்பகுதியாக கருதப்படும்.

மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உத்தியோகப்பூர்வ இணையத்தில் ciaboc.gov.lk பதிவிறக்கம் செய்யலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஆகும்.

(இந்த அனைத்து ஆட்சேர்ப்புகளும் இரண்டாம் நிலை அடிப்படையில் செய்யப்படுவதோடு, தற்போது அரசாங்க சேவையிலுள்ள ஏற்புடைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.)